291

# THE ECONOMIC CONDITION OF JAFFNA DURING DUTCH RULE

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
27 DEC 2013
VANTHARUMOOLAI,
CHENKALADY.

By

**MISS.KUGAGINI THARUMARASAN.**

**REGISTRATION NUMBER: EU/IS/2007/AC/344**

**INDEX NUMBER: CS 3344**

**DISSERTATION SUBMITTED AS THE PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENTS FOR THE DEGREE OF BACHELOR OF ARTS (SPECIAL) IN HISTORY IN THE FACULTY OF ARTS AND CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA.**

FAC291
Project Report
Library - EUSL

**DEPARTMENT OF HISTORY**

**FACULTY OF ARTS AND CULTURE**

**EASTERN UNIVERSITY**

**SRI LANKA.**

**2013.**

PROCESSE
Main Library, EU

# முன்னுரை

வரலாறு சிறப்புக்கலை நான்காம் வருடம் இரண்டாம் அரையாண்டுத் தேர்வின் ஒரு பாட அலகாக விளங்கும் ஆய்வுக்கட்டுரை (dissertation) என்ற பாடத்திட்டத்திற்கு அமைவாக ''ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலைகள்'' என்னும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வுக்கட்டுரையானது ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் போது யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை எவ்வாறு இருந்துள்ளது என்பதனை வரலாற்று ஆதாரங்கள் மூலம் நிருபிக்கப்படுகின்றது.

ஒல்லாந்தர் ஏறத்தாழ 138 ஆண்டுகள் (1658-1796) இலங்கையின் கரையோர மாகாணங்கள் முழுவதையும் தமது ஆதிக்கத்திற்குள் வைத்திருந்தனர். போர்த்துக்கேயரை அடுத்து இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய ஒல்லாந்தரின் ஆட்சி பல நிலைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது. ஒல்லாந்தர் இலங்கையின் கறுவா வர்த்தகத்தின் ஏகபோக உரிமையை பெறுவதற்காகவும், இலங்கையை கைப்பற்றுவதன் மூலம் தென்னிந்தியத்துறைமுகங்களைக் கைப்பற்றி சோழமண்டலக் கரையோடு தம் வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிக்கவும், தம் சீர்திருத்திய மதமாகிய புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பும் நோக்குடனும் இலங்கையை தமது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர்.

ஒல்லாந்தர் ஏறத்தாழ 138 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை தமது நிர்வாக மையமாகக்கொண்டு செயற்பட்டதை அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக்குடாநாடு நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி என்பனவாகும். தீவுப்பகுதிகளும் ஒல்லாந்தரின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் அடங்கியிருந்தன.

இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய நிர்வாக முறை குறைந்த செலவில் கூடுதலான வருமானத்தைப் பெறுவதேயாகும். இவர்கள் ஏற்றுமதிகளைக் குறைத்து வருமானங்களை விரயப்படுத்தாமல் பொருளாதார உற்பத்திக்கு ஊக்கமளிப்பதே இவர்களின் நோக்கமாக இருந்தது. இவர்கள் இலங்கைக்கு வருகைதந்தமைக்கான பிரதான நோக்கமாக ஒல்லாந்து தேசத்திலே இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதி மிக்கதான பெருமதிப்பு இருந்தது. ஒல்லாந்த டச்சுக்கிழக்கிந்தியக் கம்பனியின் பிரதிநிதிகளாகவே இவர்கள் இங்கு வந்தனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அவர்களின் நோக்கம் என்னவென்றால் செலவிலும் பார்க்க வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுவதே ஆகும். இவ்வாறான

நோக்கமாக இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர்கள் கரையோரப்பிரதேசத்தின் நிர்வாக முறையைப் பாதுகாத்து அவற்றின் மூலமாக வளம் பெருக்க வேண்டும், வருமானம் கிடைக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாக இருந்தது.

எனது ஆய்வானது அடிப்படையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனது ஆய்விற்கு ஆதாரமான மூலங்கள் எல்லாம் டச்சு மொழியில் உள்ளது. எனது ஆய்வின் அணுகு முறையானது கலாநிதிப்பட்ட ஆய்வுகளையும், யாழ்ப்பாணம் பற்றி வெளிவந்த முக்கியமான நூல்தேட்டங்களையும், ஒல்லாந்த ஆவணங்களையும் என்னால் சேகரிக்கப்பட்ட சில புதிய தகவல்களையும் வைத்து இவ் ஆய்வின் அணுகுமுறையானது நகர்ந்து செல்கின்றது. அதுமட்டுமன்றி ஒல்லாந்த ஆசிரியர் சிலரின் நூல்களும், ஒல்லாந்த இலங்கை தேசாதிபதிகள், யாழ்ப்பாணத் தலைமை அதிகாரிகள் முதலியோரின் பணிப்புரைகள் குறிப்பாக அவர்கள் தமக்கு பின் பதவியேற்ற உயர் அதிகாரிகளுக்காக எழுதிவிட்டுச் சென்றுள்ள அறிக்கைகள் (memoris), சமகால யாழ்ப்பாணச்சமூகம், பொருளாதார நிலை பற்றிக் கூறும் நூல்கள் என்பனவும் எனது ஆய்வுக்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

ஒல்லாந்தர் கால இலங்கை பற்றிய நூல்களிலே போல்டேயஸ் சுவாமிகள் எழுதியுள்ள **A True excict Deccription of Great Island of Ceylon** (இலங்கைப் பெரும்தீவு பற்றிய உண்மையான சரி நுட்பமான வர்ணனை) என்னும் நூல் (1972 இல் எழுதப்பட்டது) இலங்கையிலிருந்த ஒல்லாந்த மகாதேசாதிபதிகளும், யாழ்ப்பாணத்திலிருந்த தலைமை அதிகாரிகளும் எழுதியுள்ள நினைவேடுகள் பெரிய தகவல்களஞ்சியங்களாகும். இவற்றுள் றைக்ளொவ் வான்கோவன்ஸ் (கி.பி 1757-1762) முதலியோரும் யாழ்ப்பாணத் தலைமை அதிகாரிகளாகப் பணிபுரிந்த அந்தோணி பவில்ஜோன் (17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) Hendrick Zwaadeecroń கி.பி 1697 முதலியோரும் எழுதியுள்ளவையும் மகாதேசாதிபதியாகிய கெறிற்டி ஹீரே கொழும்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரை மேற்கொண்ட சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகளடங்கிய நாட்குறிப்பேடு செப்ரம்பர்,3,1697) முதலியனவும் வரலாற்றேடுகளுள் குறிப்பிடத்தக்கவை.

ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை பற்றி அரசரட்ணம் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டிருந்தாலும் யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலையானது முழுமையாக வெளிக்கொணர முடியவில்லை. எனவே இந்த ஆய்வின் மூலமாக ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலைகளை ஆராய்ந்து முன்வைப்பது எனது ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

இவ் ஆய்வின் நோக்கமாக ஒல்லாந்தர் காலத்தில் நிலவிவந்த பொருளாதார நிலையானது போர்த்துக்கேயர் காலத்திலுள்ள பொருளாதாரக் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டே ஒல்லாந்தர் தமது பொருளாதார நிலைகளை மேற்கொண்டார்கள். ஆகவே ஆய்வின் பெறுபேறாக ஒல்லாந்தர் காலத்தினதும் போர்த்துக்கேயர் காலத்திலும் இருந்த பொருளாதாரக் கொள்கைகளை அறிந்து கொள்வதும் ஆய்வின் நோக்கமாக உள்ளது.

பொதுப்பட இலங்கை வரலாறு பற்றிய ஆய்வில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் பற்றி ஆராயப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பொருளாதாரம் பற்றிய ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் பற்றி விரிவாக ஆராயப்படவில்லை. அவற்றை விரிவாக ஆய்வு செய்வது எனது நோக்கமாகும்.

ஒல்லாந்தரின் நிர்வாகக்கட்டமைப்பு குறைந்த செலவில் அதிக வருமானத்தைப் பெறுவது இக் கொள்கையால் சுதேசமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை ஆராய்வது இன்னொரு நோக்கமாகும்.

ஒல்லாந்தர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உற்பத்திப் பொருட்கள் எவ்வாறு யாழ்ப்பாணப் பொருளாதாரத்தில் நிலைத்து நிற்கின்றது எனக் கண்டுகொள்ள இவ்வாய்வு முற்படுகிறது. ஒல்லாந்தருக்கு முன் யாழ்ப்பாண அரசுகால, போர்த்துக்கேயர் கால பொருளாதாரக் கொள்கையிலிருந்து வேறுபடும் மாற்றங்களை அறிவது இவ் ஆய்வவின் இன்னொரு நோக்கமாகும். அதே போல் ஒல்லாந்தரைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் எவ்வாறு ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கைகளை பின்பற்றினர் என்பதை கண்டுகொள்ள இவ்வாய்வு முற்படுகின்றது.

ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலையினை எடுத்துக்கொண்டால் அக்காலத்தின் உற்பத்திப் பொருட்களாக புகையிலை, சாயவேர், பருத்தி, நெசவு, பனம்பொருட்கள், மல்பரிச்செடி போன்றனவும் வாணிப வாதத்தினை நோக்கின் யானை வர்த்தகம், குதிரை வர்த்தகம், முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல், முருகைக்கற்கள் போன்ற வாணிபங்களையும் குறிப்பிடலாம். இவ் வாணிபவாதத்தின் மூலமாகவும் சிலவற்றிலே அதிகளவு இலாபத்தினையும் பெற்றனர். வரி அறவீட்டின் மூலமாகவும் வருவாயை பெற்றுக்கொண்டனர். இவ்வாறானதொரு பொருளாதார நிலையானது 17ஆம்,18ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டது.